**<u>IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,</u>**
**<u>SIRKALI</u>**
**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
**<u>Case No. C.C. No.187/2021</u>**

| | | | |
|---|---|---|---|
| Deposition of | | Prosecution: | P.W-1, L.W- 1 |
| Name | : Mariyammal | Defence | : |
| Husband Name | : shanmugam | Court | : |
| Village | :V.O.C. South Street, Thenpathy , sirkali | Taluk | :Sirkali |
| Calling | : | Religion | : |
| Age | : /2022 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 01.09.2022.

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். எனது கணவரது உறவினர்கள். கடந்த 25.12.2020 அன்று காலை 10 மணிக்கு நான் எனது வீட்டில் இருந்தேன். எனது கணவர் செண்ட்ரிங் வேலைக்கு சென்றுவிட்டார். அப்போது 3 மற்றும் 4 வது எதிரிகள் எனது வீட்டிற்கு வந்து எனது கணவருக்கும் அவர்களுக்கும் உள்ள சொத்து தகராறில் ஏற்பட்ட முன்விரோதத்தால் என்னை குச்சிகாரி , என்று அசிங்கமாக திட்டி வெளியே வாடி என்று கூப்பிட்டார்கள்.எனது கணவர் இல்லாத சமயத்தில் ஏன் என்னை திட்டி சத்தம் போடுகிறீர்கள் என்று கேட்டேன்.அதற்கு 3, மற்றும் 4 வது எதிரிகள் உன்னால்தான் , நீ சொல்லிக்கொடுத்துதான் உன் கணவர் எங்களுக்கு சொத்து கொடுக்கமாட்டேங்குகிறார் என்று கூறி 3, 4 எதிரிகள் எனது தலைமயிரை பிடித்து இழுத்தார்கள்.

எதிரி மணிமாறன் கையில் வைத்திருந்த மரக்கட்டையால் எனது தலையின் நடுமண்டையில் அடித்து இரத்த காயத்தை ஏற்படுத்தினார். மேலும் எதிரி இளங்கோவனும் அவர் வைத்திருந்த கட்டையால் எனது கழுத்திலும் தோள்பட்டையிலும் அடித்ததில் எனக்கு இரத்தக்காயம் ஏற்பட்டு வீக்கமாக இருந்தது. 1,2 எதிரிகள் கட்டையை காண்பித்து என்னை கொலை மிரட்டல் செய்தார்கள்.

மேற்படி சம்பவத்தால் எனக்கு மன உளைச்சல் ஏற்பட்டது. எனக்கு காயம்பட்டது தொடர்பாக கண்ணையன் என்பவரும், வேலு என்பவரும் என் கணவருக்கு போன் மூலம் தகவல் சொன்னார்கள். பின்னர் எனது கணவர் என்னை ஆட்டோ மூலம் சீர்காழி அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்த்தார். நான் சிகிச்சையில் இருந்தபோது சீர்காழி போலிசார் என்னிடம் விசாரித்து வாக்குமூலம் பெற்று படித்து காண்பித்து என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள்.

நீதிமன்றத்தில் என்னிடம் புகார் வாக்குமு்லம் நான் கொடுத்தது. அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். (**அந்த புகார் வாக்குமு்லம் அ.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) போலிசார் என்னை விசாரித்தார்கள். தற்போது எனக்கு இரண்டு பெண் குழந்தைகள் உள்ளன , எனது இடதுகால் ஊனமாக உள்ளதால் என் பலவீனத்தை சொல்லி காட்டியும், நடந்துகாட்டியும் என்னை தொந்தரவு செய்வதால் எனக்கு மிகுந்த மனஉளைச்சாலாக உள்ளது.

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜராகியும் குறுக்கு விசாரணை செய்ய முன் வராததால் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.